# குளித்தலை நகராட்சி

15.05.2018.ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சியில் IUDM-2011-12 திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ரூ.197.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் SSWM 2015–16.ல் ரூ.56.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தற்போது குளித்தலை நகராட்சியில் 7.10 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. அதில் 4.00 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை பிரித்து நுண் உரக்கிடங்கு (MCC) மூலம் உரமாக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 14.05.2018.ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் அறிவுரைவழங்கப்பட்டது.

அதன்படி நுண் உரக்கிடங்கு (MCC) திட்டப்பணிகள்செய்ய 2–பூங்கா பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 4.00 TPD அளவிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளை திடக்கழிவு திட்டம் 2018–19.ம் ஆண்டில் சேர்த்து முழு மான்யமாக நிதி வழங்கவும் விரிவான திட்ட அறிக்கையுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற உரிய கருத்துருக்கள் சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்–02. குளித்தலை நகராட்சி பகுதிகளில் தினசரி சேகரமாகும் 7.10 மெட்ரிக் டன் குப்பைகளை சத்தியமங்கலம் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வந்த குப்பைகளை அளவீடு செய்து கணக்கிடப்பட்ட வகையில் 51,711.00 கன மீட்டர் உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 14.05.2018.ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரைப்படி Bio Mining முறையில் சுற்றுச்சூழல் மாசுபடாத வண்ணம் அப்புறப்படுத்தி மேற்கண்ட இடத்தில் கசடு, கழிவு மேலாண்மை திட்டக்கூடம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே குவிக்கப்பட்ட குப்பைகளை Bio Mining முறையில் அகற்ற ரூ.335.00 இலட்சத்தில் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தூய்மை இந்தியா திட்டம் அல்லது அரசு திட்ட நிதியில் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு வழங்க கோரியும், விரிவான திட்ட அறிக்கையுடன் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1534/2018/இ1)

பொருள்–03. குளித்தலை நகராட்சி மற்றும் அருகாமையில் உள்ள மருதூர் பேரூராட்சி ஆகிய இரண்டு பகுதிகளிலும் வெளியாகும் நச்சு தொட்டி கழிவுகள் தினசரி 31.00 கிலோ லிட்டர் என்ற அளவில் வெளியாவதாக கணக்கிடப்பட்டுள்ளது. தினசரி நச்சு தொட்டிகளில் உற்பத்தியாகும் கசடு, கழிவுகளை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றினால், இவ்விரு பகுதிகளிலும் பொது சுகாதாரம் மிகவும் மேம்பாடு அடையும். எனவே, குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சி ஆகிய 2 பகுதிகளுக்கும் ஒரே தொகுப்பாக (Cluster) ஒரே இடத்தில், ஒரு கசடு, கழிவு சுத்திகரிப்பு (Septage Management) நிலையம் நிறுவ உரிய மேலாண்மை பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.47718/2013/UGSS-2 எண்ணிட்ட 02.05.2018.ஆம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளதற்கிணங்க, குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் நவீன உரக்கிடங்கு வளாகத்தில் சுத்தகரிப்பு நிலையம் அமைக்க ரூ.400.00 லட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). நகராட்சியின் நிதிநிலைமையை கருத்தில்கொண்டு, மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை முழுவதையும் முழுமான்யமாக வழங்கவும், இத்திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் அனுமதி வழங்கலாம்.
3). இத்திட்டம் தொடர்பான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் நடவடிக்கைகளில் ஒப்பமிட, ஆணையர், குளித்தலை நகராட்சி அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்– 04.

குளித்தலை நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை துண்டிப்பு கட்டணம், அரசு விதிகளின்படி நிர்ணயம் செய்ய வேண்டி உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/2008/கு.வ.2, நாள்–21.09.2009.ன்படி கீழ்க்கண்ட விபரப்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| நகராட்சிக்கு கட்டணம் செலுத்தும் சாலை அளவு | கருங்கல் ஜல்லி சாலை | தார்சாலை | சிமெண்ட்சாலை |
|---|---|---|---|
| 0 – 30 | 1050 | 2250 | 2600 |
| 30 – 90 | 1650 | 2850 | 3200 |

மேற்படி சுற்றறிக்கையின்படி 2009 முதல் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% உயர்த்த வேண்டும். அதன்படி முந்தைய ஆண்டுகளுக்கு கணக்கிடப்பட்டுள்ளது. 2018–2019.ல் சாலை துண்டிப்பு கட்டணம்

| சாலையின் நீளம் | தார்சாலை | சிமெண்ட்சாலை |
|---|---|---|
| 0 – 30 மீ. | ரூ.3491 | ரூ.4032 |

என்கிற விகிதத்தில் மாற்றம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1153/2018/இ1)

பொருள்– 05.

குளித்தலை நகராட்சியின் அலுவலக ஈப்பு உள்ளிட்ட குடிநீர் பிரிவு வாகனங்கள் பராமரிப்பு செலவினம் மேற்கொள்ள ந.க.எண்.966/2018/இ1.ல் மன்ற தீர்மானம் எண்.83, நாள்–28.03.2018.ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் பிரிவு ஈப்பு TN-47-X-3173 வாகனத்தின் அத்தியாவசிய பணிகள் அவசர அவசியம் கருதி, சிவா ஆட்டோமொபைல்ஸ், திருச்சி நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்பட்டதையும், மற்றும் ரூ.35,405/– பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). குடிநீர் நிதியிலிருந்து செலவினம்மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1261/2018/இ1)

பொருள்– 06.

குளித்தலை நகராட்சியில் தெருவிளக்குகள் (LED) எல்.இ.டி.ஆக மாற்றம் செய்ய தனியார் நிறுவனம் M/s.TUV-SUD தெற்காசிய பிரைவேட் லிட், சென்னை ESCO திட்ட மதிப்பீடு (DPR) தயார் செய்துள்ளனர். அதன் இரண்டாவது தவணை ரூ.1,74,186/–(1,74,186.18) (ஒருலட்சத்து எழுபத்து நான்காயிரத்து நூற்று என்பத்து ஆறு மட்டும்) செலுத்த வேண்டி உள்ளது. மேற்படி தொகையை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு வரைவோலையாக அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.876/2017/இ1)

பொருள்– 07.

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு தகுதிச்சான்று மற்றும் சில்லரை பழுது நீக்கம் செய்வதற்கு 2018–2019.ம் ஆண்டுக்கான உத்தேச செலவினம்ரூ.10,00,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வண்டி எண். | வாகனம் விபரம் |
|---|---|---|
| 1) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 2) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 3) | TN-47-F-1522 | கழிவுநீர் ஊர்தி |
| 4) | TN-47-AS-5098 | ஆட்டோ |
| 5) | TN-47-AS-5109 | ஆட்டோ |

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.750/2018/எச்1)

பொருள்– 08. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2018–2019.ம் ஆண்டுக்கான டயர் ரிடையல் செய்தல், டையர் மற்றும் டீப்பு வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வண்டி எண். | வாகனம் விபரம் |
|---|---|---|
| 1) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 2) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ |
| 4) | TN-47-AS-5109 | ஆட்டோ |
| 5) | TN-47-F-1522 | கழிவுநீர் ஊர்தி |
| 6) | TN-47-AY-6449 | JCP |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1013/2018/எச்1)

பொருள்– 09. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மற்றும் புகைபோக்கி இயந்திரங்களுக்கு 2018–2019.ம் ஆண்டுக்கான டீசல் மற்றும் பெட்ரோல் K.M.V.N.&N.பிரோம்குமார் பெட்ரோல் பங்கில் பிடிப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,00,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வண்டி எண். | வாகனம் விபரம் |
|---|---|---|
| 1) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 2) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ |
| 4) | TN-47-AS-5109 | ஆட்டோ |
| 5) | TN-47-F-1522 | கழிவுநீர் ஊர்தி |
| 6) | TN-47-AY-6449 | JCP |
| 7) | புகைபோக்கி இயந்திரங்கள் | |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2208/2018/எச்1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சியில் அம்மா உணவக அறவை இயந்திரம், எரிவாயு அடுப்பு, கொதிகலன், குளிர்சாதன பெட்டி ஆகியவற்றிற்கு தேவையான மின் உபகரணங்கள் வாங்க அவசர அவசியம் கருதி 26.03.2018.ல் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தன் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண். | விபரம் | நிறுவனம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1) | 1. கிரைண்டர் பேரிங் & ஸ்பில் ஷாப்ட்,<br>2. 1" பால்வால்வ்,<br>3. 500 H டீப் பிரீஸர் கம்பரஸர்<br>4. ரிலே & கபாஸிட்டர்,<br>5. ¾ " பால்வால்வ்,<br>6. ஸ்டவ் பர்னர்,<br>7. R 134 கியாஸ்<br>8. வி கார்டு ஸ்டெபிலைசர் | 1) செல்வி எலக்ட்ரிக்கல் & Co, குளித்தலை. | ரூ.27,320/– |
| | | 2) ஜே.எல்.எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை. | ரூ.25,000/– |
| | | 3) உஷா எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை. | ரூ.26,150/– |

அலுவலக குறிப்பு– 1). வரிசை எண்.2.ல் ஆன ஜே.எல்.எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.940/2018/இ1)

..4..

பொருள்– 11. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு சாலைவரி மற்றும் பசுமைவரி 2018–19 ஆண்டிற்கு ரூ.25574/–க்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வண்டி எண். | பசுமை வரி | சாலைவரி |
|---|---|---|---|
| 1. | TN-47-X-0031 | 582 | 7200 |
| 2. | TN-47-AS-5370 | 52 | 4200 |
| 3. | TN-47-AY-6449 | 0 | 10000 |
| 4. | TN-47-F-1522 | 540 | 3000 |
| | | 1174 | 24400 |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் மேற்கொள்ள பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.852/2018/எச்1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி அலுவலக உபயோகத்திற்கான கணினி மற்றும் கணினி உபகரணங்கள் சப்ளைசெய்ய மன்ற தீர்மானம் எண்.28, நாள்–12.02.2018.ல் அனுமதிக்கப்பட்டதன்படி 13.03.2018.ல் ஒபப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்கள் | மதிப்பீட்டில் சதவீதம் |
|---|---|---|---|
| 1) | அலுவலக கணினி உபயோகத்திற்கான கணினி, டோனர், பிரிண்டர், டெஸ்க்டாப், கீபோர்டு, மவுஸ் உள்ளிட்ட உபகரணங்கள் சப்ளை செய்தல். | 1). கம்ப்யூட்டர் பார்க், கரூர். | 0.03 % குறைவு |
| | | 2). யூனிக்யு மைக்ரோ கம்ப்யூட்டர், கரூர். | 0.20 % அதிகம் |

அலுவலக குறிப்பு– குறைவான விலைவிகிதம் மதிப்பீட்டில் 0.03 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கம்ப்யூட்டர் பார்க், கரூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.3256/2017/இ1)

*******

## <u>குளித்தலை நகராட்சி</u>

15.05.2018.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 94 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 2 | 2 | 95 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 96 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 4 | 97 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 98 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 6 | 6 | 99 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 100 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 101 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 102 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 103 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 104 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 105 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.